**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 19.06.2026**
**OS. No. 198/2023**
**வழக்கு சாட்சி PW.1– மோகன்குமார், த/பெ. வெங்கடாஜலம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என் பட்டா நிலத்தில் ரோடு அமைக்கப்போவதாக 4ம் பிரதிவாதி தரப்பில் முடிவு எடுக்கப்பட்டிருந்தது, அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் பழனிசாமி, முருகவேல், கோவிந்தராஜ், லக்கம்பட்டி பஞ்சாயத்து தலைவர் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் ச.எண்.223/24 ஆகும். அதை என் தந்தை 2005ம் வருடம் கிரையம் பெற்றார். 2021ல் எனக்கு என் தந்தை தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கொடுத்துவிட்டார். தாவா சொத்துக்கு பக்கத்திலுள்ள சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது.

2) தாவா சொத்திற்கு நடுவில் இட்டேரி பாதை ஒன்று செல்கிறது என்றால் சரியல்ல. ச.எண்.223/3 மற்றும் ச.எண்.224 ஆகிய இரண்டு சர்வே எண்களுக்கும் இடையில் 6 மீட்டர் அகலத்தில் 198 மீட்டர் நீளத்தில் பஞ்சாயத்து நிலவியல் பாதை உள்ளது என்றும், அது வருவாய் ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரத்து செய்யுமாறு கேட்கப்பட்ட தீர்மானம் குறித்து என்னிடம் எந்த ஒப்புதலும், தகவலும் தெரிவிக்காததால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியவில்லை. தீர்மானத்தில் என்ன வாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) என்னுடைய சொத்தான ச.எண்.223/3ல் 4ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்குமாறு என்னை அனுகினார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய சொத்தில் தடம் வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். வருவாய் துறையினர் தாவா சொத்தில் சாலை அமைப்பதற்காக அளக்க முற்பட்டார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால்

சரியல்ல. 4ம் பிரதிவாதியின் மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், ஆனால் அவர்கள் உள்ளாட்சி நிர்வாகி என்பதால் நடவடிக்கை எடுக்கமாட்டேன் என்று தெரிவித்தாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றும், காவல் துறையினர் யார் மீது புகார் கொடுத்தாலும் புகாரில் உண்மை தன்மை இருந்தால் நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக வருவாய் துறையினர் மீது மாண்புமிகு மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நிலத்தை வந்து பார்வையிட்டாரா என்றால் ஆமாம். 4ம் பிரதிவாதியை பொறுத்தவரை மக்கள் பயன்பாட்டிற்கு தான் செயல்படுவார் என்றும், தனிப்பட்ட கருத்திற்காக செயல்படமாட்டார் என்றால் சரியல்ல. நிலவியல் பாதை என் நிலத்தில் உள்ளதால் தான் பாதை கேட்கப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.